

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மங்களூரில் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர் ஒன்றிய செயலாளர்கள் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், அடரி. த. சின்னசாமி பா. செங்குட்டுவன் திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி. பரமகுரு மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### வடலூர் - பார்வதிபுரத்தில்

# ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

கடலூர், ஜுன் 16-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமத்திலுள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமம், சவேரியார் நகரைச் சேர்ந்த வின்சென்ட் அமல்ராஜ் அந்தோணி என்பவரின் மகன் அப்டியல் டெவின் ரோஜர் (வயது 17) என்பவர் நேற்று முன்தினம் (14.6.2025) மாலை சுமார் 5.00 மணியளவில் பார்வதிபுரம் கிராமத்திலுள்ள வெங்கலத்து ஏரியில் நண்பர்களுடன் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கே.சீதாராமன் தலைமை! வேலூர் மாவட்டம் - கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் - முன்னாள் பெருந்தலைவர்

# துரை சாம்பசிவம் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

## டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. - கவிஞர் அப்துல் காதர் அஞ்சலி!

வேலூர், ஜுன் 16-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் பெருமாங்குப்பத்து பெரியவர் முன்னாள் பெருந்தலைவர் துரை சாம்பசிவம் அவர்களின் 10ம் ஆண்டு நினைவேந்தல் புகழஞ்சலி கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளரும் முரசொலி தமிழ் மன்ற நிறுவனருமான கே.வி. குப்பம் சி.கோபி ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்விற்கு, கே.வி.குப்பம் மத்திய, கிழக்கு, ஒன்றிய கழக செயலாளர்களான லோ. இரவிச்சந்திரன் (ஒன்றிய குழுத் தலைவர்), இரா. முருகேசன், ஒன்றிய அவைத் தலைவர் இரா.தாமோதரன் ஆகியோர் முன்னிலை வகிக்க அய்யா துரைசாம்பசிவம் அவர்களின் மூத்த மகன், தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறை தலைவர் முனைவர் சா.உதயசூரியன் அனைவரையும் வரவேற்றார்.

அய்யா.துரை சாம்பசிவம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. மாநில ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தலைவர் து.மு.கதிர் ஆனந்த் எம்.பி. மாலை அணிவித்து மலர் தூவி வீர வணக்கம் செலுத்தினார். இவருடன் கலைமாமணி, கவியருவி, பேராசியர் அப்துல்காதர் கலந்து கொண்டு நினைவேந்தல் மற்றும் புகழஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்தி னார். இவர்களுடன், மாநில திராவிட நட்புக் கழக துணை தலைவர் சிங்கரா யர், திராவிட கழக மாவட்ட காப்பாளர் வி.சடகோபன், தலைமை செயற்குழு உறுப்பினர் வே.கு.ரா. சுந்தர வடிவேலு, பொதுக்குழு உறுப்பினர் க.தயாளமூர்த்தி, மு. ஒன்றிய செயலாளர் வ. த.ஜெயக்குமார் ஒன்றிய அவைத்தலைவர் மு.அசோக் குமார் (மாவட்ட கவுன்சிலர் ) வெ.ஜெயராஜ், பாரதி வெங்டேசன், கட்டுகல் பாஸ்கர், வ.எத்திராசன் பா.சிவகாமி, முடினாம்பட்டு கு.குப்பன் மரு.கோவி தூயவன், கவுன்சிலர்கள் டி.இரவி. வேலு, உதயசூரியன், பாரதி, மாரி.சிவக்குமார், ச.சிவக்குமார், சே.வண்டை, சத்யா, எஸ்.டி ரகு, பிஏடிசி முருகேசன், ஜெயச்சந்திரன், விஜயன், கவசம்பட்டு வேல்முருகன், மு.பட்டு சிதம்பரம் இரா.சந்திரன் மு. பிரபு, சே. கபில்தேவ், ஒன்றிய இளைஞானி அமைப்பாளர் சே. மோகன், து. அமைப்பாளர்கள், ஏவிஎம் பிரபு, மாணவரணி சி.ரஞ்சித்குமார், அரங்கண்ணல், பொதிகைவளவன், இளங்கோவன்,

இ அணி து. அமைப்பாளர்கள் ச.நா. சாமுவேல், ஷியாம். தகவல் தொழில்நுட்ப அணி இரா.முரளி, கா.சுரேஷ ஆசிரியர் இரவிச்சந்திரன், வெ.ஜெ.விவேகநந்தன், பெருமாங்குப்பம் அ.சிற்றரசு, ம. அன்பரசு, தென்னரசு, முருகன் சகா. குட்டி, ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த அய்யாவின் மனைவி அரங்கநாயகி, மகன்கள் முனைவர் சா.உதயசூரியன்,முனை வர் சா.முத்தழகு, வேளாண் சா. உதயசந்திரன். கல்வியாளர் சா. பரிமளம், சா.அல்லி (மகள்), சமூக செயல்பாட்டாளர் சா.குமரன், பல் மருத்துவ நிபுணர் சா. அகத்தியன் மற்றும் குடும்ப உறவினர்கள், புகழஞ்சலி உரைகளை ஏற்றனர்.

முடிவில், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா. பரிமளம் நன்றி கூறினார். இந்த நிகழ்வினை, இந்த குடும்ப உறவினர்களோடு இணைந்து கே.வி.குப்பம் முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்தது.

### அறந்தாங்கி தெற்கு ஒன்றிய மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர்

# கழக முன்னோடி அண்ணாமலை தாயார் எஸ்.வி.ஜானகி ஆச்சி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி - இன்று உடல் அடக்கம்!



புதுக்கோட்டை, ஜுன் 16 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி தெற்கு ஒன்றிய முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் அறந்தை அண்ணாமலை அவர்களின் தாயார் எஸ்.வி..ஜானகி ஆச்சி அவர்கள் நேற்று (15-06-2025 ஞாயிற்றுக்கிழமை) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும், அப்பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், முன்னணியினர் அன்னாரது இல்லத்தில் உள்ள அவரது உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைவெய்திய எஸ்.வி. ஜானகி ஆச்சி அவர்களின் நல்லடக்கம் இன்று ( 16-06-2025 திங்கள்கிழமை) காலை 09.00 மணி அளவில் காரைக்குடி நீத்தார் விடுதியில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.





பெரம்பூர் வடக்கு பகுதி, 34 வட்ட தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வட்ட செயலாளர் கே.வி. ராஜன் தலைமையில் பகுதி செயலாளர் அ.முருகன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் பாகம் வாரியாக உறுப்பினர்களின் பெயர் மற்றும் கைபேசி எண்களை கேட்டு உறுதி செய்து கொண்டார். உடன் தயாளன் எஸ்.ஆர்.கமலக்கண்ணன் , ஷர்மிளா காந்தி, ஜியாவுதீன் , செந்தூர் பாண்டியன் , லீலா வேலு , லதா, எஸ்.டி.சேகர் வர்மா, என்.நந்தகோபால், வட்ட கழக நிர்வாகிகள் யுவநாதன் , சத்தியேந்திரன் , முத்தரசன், சுமதி, ராஜகோபால், போத்தி , குமரேசன் , தினகரன், யூசுப் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஊரக வளர்ச்சி துறை மற்றும் தமிழ்நாடு மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்தார் விழுப்புரம் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ விழுப்புரம் சட்டக்கல்லூரி அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகளிர் மேம்பாட்டு துறையின் சார்பில் பல்வேறு நல திட்டங்களை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் கே எஸ் மஸ்தான் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் ஏ சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன். கூடுதல் ஆட்சியர் திருமதி பத்மஜா மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் ஷீலா சேரன் நகர மன்ற தலைவி தமிழ்ச்செல்வி பிரபு மற்றும் அரசு துறை அதிகாரிகள் இருந்தனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 116வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை,ஜுன்.16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 116 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (15.6.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) 98 வது வட்டம் -பார்த்தசாரதி தெரு.

2) வட்டம் 98 அ- மேட்டுத்தெரு வன்னியர் சங்க மண்டபம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும்,தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வே.வாசு, கூ. பீ.ஜெயின், லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க. சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ)உமாசங்கர், சொ. முருகேசன், ப.லோகுபாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சியில் – சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்திட

# நகர விற்பனைக் குழு அமைப்பதற்கான தேர்தல் நடவடிக்கைகள்!

## மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜுன்.16-

பெருநகர சென்னை மாநகராட்சியில், சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைப்பதற்கான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைப்பதற்கான தேர்தலை சுமூகமாகவும் அமைதியாகவும் நடத்துவதற்காக தேர்தல் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் தலைமையில் 13.06.2025 அன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கலந்தாய்வுக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆணையாளர் - வேட்பு மனு வழங்கல் தொடங்கும் நாளான 16.06.2025 அன்று முதல் 26.06.2025 அன்று நடைபெறவுள்ள வாக்குப்பதிவு நாள் மற்றும் 27.06.2025 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கை முடிவு வரை காவல்துறையின் மூலம் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலும், தேர்தலில் வாக்குப்பதிவு மையங்கள், வாக்கு எண்ணிக்கை மையங்கள் ஆகிய இடங்களில் குடிநீர், கழிவறை உட்பட போதிய அடிப்படை வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக வாக்குப்பதிவு மையங்களில் சாய்வுமேடை (Ramp) மற்றும் சக்கர நாற்காலி (Wheel Chair) அமைக்கப்பட வேண்டும். வாக்காளர்கள் எந்த மையத்தில் தன்னுடைய வாக்கினைப் பதிவு செய்ய வேண்டும் என்பதை எளிதில் அறிந்து கொள்ள ஒவ்வொரு மையத்திலும் உதவி மையம் (Help Desk) ஏற்படுத்த வேண்டும். வாக்குப்பதிவு மையங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவி, நிகழ்வுகள் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முக்கியமாக வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு சாலையோர வியாபாரியும், தேர்தலில் வாக்குப்பதிவு செய்யும் முன்பு பெருநகர சென்னை மாநகராட்சியால் 2023ம் ஆண்டில் வழங்கப்பட்ட சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டையை காண்பித்தாலோ அல்லது புதியதாக சிப் பொருத்திய அடையாள அட்டையை காண்பித்தாலோ அல்லது அடையாள அட்டை இல்லாதவர்கள் தன் பெயர் மற்றும் முகவரிக்கான ஆதார் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / வங்கிக் கணக்குப் புத்தகம் / குடும்ப அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு அசல் ஆவணத்தை காண்பித்து வாக்களிக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் ஆணையாளர் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஒரு வாக்காளர், பதிவு செய்யப்பட்ட மண்டலத்திலிருந்து மற்றொரு மண்டலத்தில் போட்டியிட விரும்பினால், குறிப்பிட்ட அந்த மண்டலத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு சாலையோர வியாபாரி முன்மொழிபவராகவும், மற்றொரு சாலையோர வியாபாரி வழிமொழிபவராகவும் இருந்தால் மட்டுமே அவருடைய வேட்புமனு ஏற்கப்படும். எனினும், ஒரு சாலையோர வியாபாரி ஏதேனும் ஒரு மண்டலத்தில் ஒரு பிரிவில் மட்டுமே போட்டியிட முடியும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை காவல் துறை கூடுதல் ஆணையர் (வடக்கு) பிரவேஷ்குமார், வட்டார துணை ஆணையர்கள் எம். பி.அமித், (தெற்கு), கே.ஜெ. பிரவீன் குமார், (மத்தியம்), பள்ளிக்கரணை காவல் துறை துணை ஆணையர் ஏ.சி.கார்த்திகேயன், போக்குவரத்து காவல்துறை துணை ஆணையர் சி.சங்கு, தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள், மாநகர வருவாய் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், கூடுதல் நல அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் சின்னம்மா பேட்டை ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில்JJM / SVS 2022 2023 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் 17.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டியை மக்கள் பயன்பாட்டிற்காக வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கழகச் செயலாளர் எஸ். மகாலிங்கம், சி. ஜெயபாரதி, களாம் பாக்கம் எம். பன்னீர்செல்வம், ரமேஷ், நீலாவதி சீனிவாசன் ஜீவன்ஞானபிரகாசம், ஏ.பி. செந்தில்குமார், வழக்கறிஞர் டி. தினகரன், பி. சரவணன், முனிகிருஷ்ணன், ஞானமூர்த்தி, புருஷோத்தமன், சீனிவாசன், மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.